சாட்சிய வாக்குமூலம்
மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
அமர்வு வழக்கு எண் 91/2018

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 9 (LW 11) | நாள் | 16.11.2024 |
| பெயர் | ராஜகோபால் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | நாகப்பட்டினம் | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

(1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜரில்லை. 2 வது எதிரி சார்பாக 1ம் எதிரி மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.)
சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது நாகப்பட்டினம் மாவட்ட மீன்வளத்துறை கடலோர சட்ட அமலாக்கபிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மணல்மேடு காவல் நிலையத்தில் 07.06.2010ல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன். நான் மணல்மேடு காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது மணல்மேடு காவல் நிலைய மனு எண். 235/2010 ஐ விசாரணை செய்து மணல் மேடு காவல் நிலைய குற்ற எண். 176/2010 ச/பி 447, 506(ii) உ/இ 3(1) of TNPPDL ACT ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த **முதல் தகவலறிக்கை அ.சா.ஆ –6** ஆகும். புகாருடன் **புகார்தாரர் இணைத்து கொடுத்த மூன்று போட்டோக்கள் சாபொ– 1 வரிசை** . அன்றைய தினமே புகார் தாரரான ஹபீப்ஜான் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இரவு நேரமாக இருந்ததால் மறுநாள் காலை 7.00மணக்கு சம்பவ இடமான கடலங்குடி மடவிளாக விநாயகர் கோவில் தெருவில் வாதியின் வீட்டின் முன்புறம் சாட்சிகள் கலியமூர்த்தி, முருகேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ 7** ஆகும். பின்னர் சாட்சிகள் செல்வராஜ், ராதாரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் 08.06.2010 அன்று 7.30 மணிக்கு மகசர் தயார் செய்து அந்த மகசரில் அந்த சாட்சிகள் முன்னிலையில் 1. சுமார் 30 செமீ நீளமும் 15 செமீ அகலமும் கொண்ட சிமெண்ட் சிலாப் இரண்டு, 2. உடைந்த சிமெண்ட் சிலாப் துண்டுகள் கொஞ்சம், 3. காம்பவுண்ட் சுவரிலிருந்து உடைக்கப்பட்ட கம்பிகள் கொஞ்சம் ஆகியவற்றை கைப்பற்றினேன். என்னிடம் காட்டப்படும்

நீதிமன்றத்தில் உள்ள வழக்கு சொத்துக்கள் நான் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியவைதான். **அவை முறையே சாபொ 2 முதல் 4** ஆகும். பின்னர் சாட்சிகள் அப்துல் ஹலீப், வெங்கடேசன், நாகராஜ், கலியமூர்த்தி முருகேசன் செல்வராஜ், ராதாரவிச்சந்திரன் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே சாட்சி தென்னரசு கடலங்குடி VAO என்பவரை விசாரத்து அவரிடம் VAO சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த VAO சான்று ஏற்கனவே அசாஆ. 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினமே அந்த காம்பவுண்டை கட்டிய கொத்தனார் பாஸ்கர், கடலங்குடி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். அந்த **படிவம் 91 அசாஆ. 8** ஆகும். எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் தலைமறைவில் இருந்தார்கள். இவ்வழக்கை புலன்விசாரணை அதிகாரி ஆய்வாளர் என்பதால் 09.06.2010 அன்று ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

**1, 2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1 வது எதிரியே குறுக்கு விசாரணை செய்தார்.

நான் மணல்மேடு காவல் நிலையத்தில் எந்த தேதி முதல் எந்த தேதி வரை பணியில் இருந்தேன் என்றால் 2010 ஆறாம் மாதம் முதல் 2011 பிப்ரவரி மாதம் வரை பணியில் இருந்தேன். நான் பணிபுரிந்த கால கட்டத்தில் செந்தில் குமார் காவல் ஆய்வாளர் மணல்மேடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இல்லை. என்னிடம் காட்டப்படும் எ.த.ச – 1 மனுரசீதை யார் போட்டது என்றால் யார் போட்டது என்று தெரியவில்லை. அசா1 மீது 17.04.2010 அன்று இந்த வழக்கின் 1ம் எதிரி புகார் கொடுத்து மனு ரசீது கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் அது சிவில் பிரச்சனை என்பதால் நீதிமன்றம் மூலம் தீர்த்துக்கொள்ள சொல்லி என்னிடமும் அசா – 1 டமும் காவல் நிலையத்தில் எழுதி வாங்கி கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஹபீப்ஜான் யாரிடம் புகார் கொடுத்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை காலம் எண். 8 ல் மனு எண். 235/2010, தேதி 11.05.2010 கொடுத்து பின்னர் வழக்கு பதிவு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த புகாரின் அடிப்படையில்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரி. அந்த புகாரிலும் முதல் தகவல் அறிக்கையிலும் 1, 2 எதிரிகள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் மற்றும் ஐந்து நபர்கள் என்று எதிரிகள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அந்த ஐந்து நபர்கள் யார் என்றால் 1, 2

எதிரிகள் தலைமறைவாகிவிட்டதால் மற்ற ஐந்து நபர்கள் யார் என்று புலன்விசாரணையில் தெரியவரவில்லை. 07.06.2010 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு 08.06.2010 ல் நானும் முகுந்தன் SSI ம் காரில் 1ம் எதிரி குடியிருந்த வீட்டிற்கு வந்து 1ம் எதிரியையும் அவர் மனைவியையும் காரில் ஏற்றி மணல்மேடு காவல்நிலையத்திற்கு அழைத்துபோனோம் என்றால் சரியல்ல. செந்தில் குமார் காவல் ஆய்வாளர் அசா1 கொடுத்த புகார் பொய்புகார் என்பதால் அந்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 5ம் மாதம் பணிமாறுதலில் சென்றுவிட்டார் என்பது உண்மை. அதன்பிறகு 6ம் மாதம் வேலு என்பவர் காவல் ஆய்வாளராக மணல்மேடு காவல் நிலையத்தில் பொறுப்பேற்றார் என்றால் சரி. அவருக்கு சொத்து பிரச்சனை பற்றி எதுவும் தெரியாததால் 07.06.2010 அன்று 1,2 எதிரிகள் மீதும் மற்றும் ஐந்து நபர்கள் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புகார் மனுவின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. 26 நாட்கள் கால தாமதாமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் புகாரின்பேரில் ஏற்கனவே மனு ரசீது கொடுக்கப்பட்டுள்ளது. நான் 6ம் மாதம் பணியில் சேர்ந்தபிறகு மனுவை பரிசீலித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். காவல் ஆய்வாளர் செந்தில்குமார் மணல்மேடு காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது அங்கு நானும் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன் என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் இரண்டாவது பக்கத்தில் காலம் 12ல் நிலைய மனு எண். 235/2010, 15.10.2010, அரசு வழக்கறிஞர் அபிப்ராயம் பெற்றிருந்ததை பார்வையிட்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. அரசு வழக்கறிஞரிடம் அபிப்ராயம் பெற்றது யார் என்றால் நான் தான். அந்த அரசு வழக்கறிஞர் பெயர் மற்றும் அபிப்ராயம் பெற்ற தேதி ஞாபகம் இல்லை. அரசு வழக்கறிஞரின் அபிப்ராயம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் எந்த தேதியில் அனுப்பப்பட்டுள்ளது என்றால் 14.06.2010 அன்று அனுப்பப்பட்டுள்ளது. எவ்வளவு நேரத்தில் அனுப்பவேண்டுமென்றால் 24 மணிநேரத்தில் அனுப்பவேண்டும். ஒருவாரம் கால தாமதமாக முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்ப என்ன காரணம் என்றால் ஆள் பற்றாக்குறை காரணம். 26 நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்து காவல் ஆய்வாளர் வேலு என்னை விசாரித்தாரா என்றால் அது சம்பந்தமாக விசாரிக்கவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது சம்பந்தமாக விசாரித்தார். 26 நாட்கள் கால தாமதத்திற்கு நீதிமன்றத்தில் அறிக்கை எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. புகார்தாரரை விசாரித்து வாக்குமூலம் யார் வாங்கினார்கள் என்றால் நான்

தான் 07.06.2010 ல் வாங்கினேன். மற்ற சாட்சிகளிடம் 08.06.2010 ல் வாக்குமூலம் வாங்கினேன். அசா 1 யிடம் பெற்ற வாக்குமூலத்தில் 08.06.2010 என்று தேதி குறிப்பிட்டு 07.06 என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. தவறுதலாக தேதி குறிப்பிட்டு சரியான தேதி திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அந்த திருத்ததிற்கு மேலொப்பம் செய்யவில்லை என்றால் சரி. எதிரிகளின் வயது முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரி. வாதி கொடுத்த புகாரில் எதிரிகளின் வயது இல்லாததால் குறிப்பிடவில்லை. குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யும்போது எதிரிகள் வயது குறிப்பிடவில்லை என்றால் நான் குற்றப்பத்திரிக்கை செய்யவில்லை. காவல் ஆய்வாளர் வேலு தாக்கல் செய்துள்ளார். ஒரே தேதியில் அவசரகதியில் சாட்சிகளை விசாரித்து பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒரே நாளில் சாட்சிகளை விசாரிக்க முடியுமா என்றால் முடியும். சம்பவம் நடந்து 26 நாட்கள் கழித்து சம்பவ இடத்திலிருந்து பொருட்களை கைப்பற்றியதாக சொல்வது ஏற்புடையதாக இல்லை என்றாலும் அவ்வளவு நாள் கழித்து அந்த பொருட்கள் அங்கிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் வழக்கு சொத்துக்களை கைப்பற்றினேன்.

(குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)